# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 34வது கூட்டறிக்கை 2020.12.08

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 34வது அமர்வு 2020.12.08 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம். நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. திரு.வீ.ஜெயச்சந்திரன் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 04. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 06. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 08. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 19. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. செல்வி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 34வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இவ் அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வை.பீ.எம்.முஸம்மில் |

கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள் இந்த சூழலில் பிரயாணம் செய்ய முடியாததனால் சபை அமர்விற்கு வருகை தர முடியாதென்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார். அவர்களுக்கு விடுமுறை வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

**தீர்மானம் - 04/34/01**

கௌரவ உறுப்பினர் I.L.M.மாஹிர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை தரமுடியாதென்று அறிவித்தல் விடுத்திருப்பதால் அவருக்கு விடுமுறை வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இன்றைய ஊரின் நிலை இன்று வரைக்கும் 06 பேர் நோயாளிகளாக இனங்காணப்பட்டு இருக்கின்றார்கள். அவர்களுடன் தொடர்புபட்ட 23 பேருக்கு நேற்று PCR பரிசோதனைகள் நிகழ்த்தப்பட்டது. அதன் முடிவுகள் நாளை எதிர்பார்க்கின்றார்கள். அத்தோடு இன்று சில சன நெருக்கடி உள்ள இடங்களில் PCR பரிசோதனைகள் நடாத்துவதற்கு திட்டமிட்டிருக்கின்றார்கள். இந்த நிலையில் இந்த கூட்டத்தை மிகவும் சுருக்கமாக முடிக்க வேண்டும். அத்தோடு முக்கிய காரணமாக கொவிட் இவ்வளவு காலமும் நமது காலடியில் வரவில்லை இன்று வந்துவிட்டது. அதை எப்படி இந்த ஊரின் அடிப்படை சுகாதாரத்தை பொறுப்பாகக் கொண்ட சபையாக நாம் கட்டுப்படுத்த, முன்வைக்கும் தீர்மானங்களைப் பற்றி பேசுவது முக்கியம். முதற்கட்டமாக சென்ற மாதத்தின் செலவீனங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் அதனை கேட்கலாம்.

வாகன டயர் விலைகளில் சில கருத்துக்கள் கூறப்படுகின்றது. அதனால் Technical Committee Evaluation இற்கு பின் அல்லது விலை கோரப்பட்ட பின் கௌரவ உறுப்பினர் முஸம்மில், கௌரவ உறுப்பினர் நளீம், கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்கள் இணைந்து மூவர் கொண்ட குழு அதனைப் பார்த்து அதற்குரிய அறிவுரைகளை கொடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**தீர்மானம் - 04/34/02**

சென்ற மாதம் 2020.11.01 தொடக்கம் 2020.11.30 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வை.பீ.எம்.முஸம்மில் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அடுத்த வருடத்தின் அமர்வுகளுக்குரிய தினங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதையும் உங்கள் கவனத்திற்காக கூறுகின்றேன். அடுத்ததாக தற்காலிக, ஒப்பந்த, பதிலீட்டு அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களின் நீடிப்பு இது வழமையாக 06 மாதத்திற்கு செய்ய வேண்டிய விடயமாகும்.

**தீர்மானம் - 04/34/03**

2021 ஆம் ஆண்டில் தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் சுகாதாரத் தொழிலாளிகள், சாரதிகள், வேலைத் தொழிலாளிகள், நூலக உதவியாளர்கள், காவலாளிகள், QS, RS போன்ற ஊழியர்களின் சேவைக்காலத்தினை நீடித்து வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கிழக்கு மாகாண சபையினால், சபை நடவடிக்கைகளைப் பற்றிய ஒழுங்கு விதிகள் வர்த்தமானி தொடர்பாக சென்ற அமர்வில் பேசினாலும் அதை ஒரு முடிவாக எடுக்கவில்லை. தவிசாளர்கள் நிர்வாக எல்லையை விட்டு வாகனம் பாவிப்பதற்கு அனுமதி எடுக்க வேண்டும் என்ற குறிப்பு என்னைப் பொருத்தமட்டில் பொருத்தம் இல்லாதது. சட்டத்தைப் பொருத்தமட்டில் தவிசாளருக்கு அங்கீகாரம் கொடுப்பது சபை. அதற்கு மேல் அமைச்சரிடமோ, ஆணையாளரிடமோ எதற்கு அனுமதி எடுக்க வேண்டும், என்று தெளிவாக சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. அம் முதல் சர்த்தை தவிர மற்றவைகளை ஏற்று அதற்கு ஏற்றவாறு, நிதி இருக்கும் பட்சத்தில் அதை செயற்படுத்துவதற்கு இந்த சபையின் அங்கீகாரத்தை கோருகின்றேன். முதல் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தோம். ஏனென்றால் நான் மாவடிப்பள்ளிக்கு செல்வது என்றாலும் ACLG இடம் அனுமதி எடுக்க வேண்டும். அது செய்ய இயலாத விடயம். சபையின் செலவுகளை கட்டுப்படுத்துவது சபை. சட்டத்தில் சில விடயங்களுக்கு அமைச்சரின் அல்லது ஆணையாளரின் அனுமதி இல்லாமல் செய்ய முடியாது என்று இருக்கின்றது. உதாரணமாக வருமானம் வருகின்ற Courts இற்கு 4 ½ இலட்சம் செலவளிப்பதை நாம் செய்ய இயலாது. அது அமைச்சரின் அனுமதியினை எடுத்து செய்தோம். ஆனால் எமது நாளாந்த நடவடிக்கைகளுக்கு அவர்கள் தலையிடக்கூடாது. அவ்வாறு தலையிட விட்டோமானால் ஒவ்வொரு விடயத்திலும் அவர்கள் தங்களிடம் அனுமதி எடுக்க வேண்டும் என்று கூறுவார்கள். எனவே சபையின் அதிகாரம் இல்லாமலாகிவிடும். இது திணைக்களம் ஆகிவிடும்.

**தீர்மானம் - 04/34/04**

கிழக்கு மாகாணத்தின் கௌரவ ஆளுநரால் வெளியிடப்பட்ட அதி விசேஷமான வர்த்தமானப் பத்திரிகை இலக்கம் 2184/9 2020.07.13, திருத்தப்பட்ட இலக்கம் 2198/56 2020.10.23 இற்கு அமைவாக அதில் குறிப்பிடப்பட்ட முதலாவது விதியின் குறிப்புகள் தவிர்ந்த கௌரவ தவிசாளர், கௌரவ உப தவிசாளர், கௌரவ உறுப்பினர்களுக்கு போக்குவரத்து செலவு மற்றும் அதனோடிணைந்த கொடுப்பனவுகள், உணவு மற்றும் உபசரணைச் செலவுகள், தொலைபேசிக் கொடுப்பனவு, பிரதேச சபை விசேட கூட்டங்கள் மற்றும் சட்டவாக்க ஆலோசனைக்குழு/ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கான கொடுப்பனவு என்பவற்றை வழங்குவதற்கான அறிவித்தலை ஏற்றுக் கொண்டு சபை நிதி நிலமைக்கு ஏற்ப நடந்து கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | வை.பீ.எம்.முஸம்மில் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சம்மாந்துறையில் கொவிட் 19 அழுத்தம் கூடுமானால் அடுத்த சபைக் கூட்டம் Zoom இல் நடத்த வேண்டி ஏற்படலாம். Zoom கூட்டம் நடாத்துவதற்காக அரசாங்கத்தினால் UNDP இன் உதவியோடு ஒவ்வொரு சபைக்கும் இணைப்புகள் செய்து கொடுக்கின்றார்கள். Internet இணைப்புகளை உருவாக்குவதற்கு அவர்கள் ஆரம்ப செலவுகளை செய்வார்கள். பின்னர் மாதாந்த கட்டணங்களை சபை செலுத்த வேண்டும். அவர்கள் Conference Room இற்கு இணைப்பை ஏற்படுத்தி TV பொருத்தி தருவார்கள். அதற்கு பின் மாதாந்த கட்டணத்தை நாம் செலுத்த வேண்டும்.

**தீர்மானம் - 04/34/05**

1. CDLG திட்டத்தின் மூலம் UNDP அனுசரனையில் Virtual Communication Fiber இணைப்பிணை பெறுவதற்கு இணக்கப்பாட்டினை வழங்கவும், ஒரு வருடத்தின் பின்னரான காலத்தில் மாதாந்த கட்டணத்தினை சபை நிதி மூலம் செலுத்துவதற்குமான பிரேரணை.

2. தேவை ஏற்படின் Internet இணைப்பு இல்லாத சபையின் வாசிகசாலைகளுக்கும் இணைப்பு ஏற்படுத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வளத்தாப்பிட்டி, மல்வத்தை தபால் அலுவலகம், மல்வத்தை பாடசாலை முன்பாக பஸ் தரிப்பு நிலையம் அமைத்தல். இது தொடர்பாக கௌரவ உறுப்பினர் ஜெயச்சந்திரன், கௌரவ உறுப்பினர் இன்பவதி, கௌரவ உறுப்பினர் வளர்மதி அவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க 03 பஸ் தரிப்பு நிலையங்களுக்கு நாம் மதிப்பீடு செய்திருக்கின்றோம். ஆனால் இந்த வருடம் இந்த மாதத்திற்குள் செலவளிக்கக் கூடிய ஒரு குறுகிய தொகை, ஆகக்கூடியது 03 மில்லியனிற்கு மேல் செலவளிக்க இயலாது. அதில் ஏற்கனவே 03, 04 வேலைத்திட்டங்கள் செய்திருக்கின்றோம். இவைகளை அனுமதித்துவிட்டு பணம் வருகின்ற போது ஒவ்வொரு கட்டமாக இதை செய்வதற்கு சபையின் அனுமதியை கேட்கின்றேன்.

## தீர்மானம் - 04/34/06

வளத்தாப்பிட்டி, மல்வத்தை தபால் அலுவலகம், மல்வத்தை பாடசாலை முன்பாக பஸ் தரிப்பு நிலையம் அமைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர்.வளர்மதி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வாகன டயர்கள் தொடர்பாக, அதனை கொள்வனவு செய்வதற்குரிய அனுமதியினை வழங்குவோம். ஆனால் எந்த Brand என்ற தீர்மானத்தை அந்தக் குழு பார்த்து தீர்மானிக்க வேண்டும். ஏனென்றால் இதில் பெரிய சர்ச்சைகள். ஒவ்வொரு Brand உம் வித்தியாசப்படலாம். தனிப்பட்ட முறையில் நான் களனி டயர் கொள்வனவு செய்தும் ஓடலாம். ஆனால் அதை விட நல்ல டயர் என்றால் கூடுதலாக விலை கொடுத்து வாங்க வேண்டும். அது எனது தனிப்பட்ட தீர்மானம். ஆனால் நிர்வாக ரீதியில் நியாயப்படுத்தல் ஒன்று இருக்க வேண்டும். எமது Tractor எல்லாம் ஆளங் குளத்திற்கு சென்று வரவேண்டும். அதற்கு சரியான டயர் இல்லாவிட்டால் அதில் வருகின்ற பாதிப்பு அதிகம். அதை நிர்வாகிகளின் கையில் விடாமல் அனுபவம் உள்ள கௌரவ உறுப்பினர்கள் 03 பேர் இருந்து அதை தீர்மானித்து செய்ய வேண்டும்.

## தீர்மானம் - 04/34/07

ZB – 0356, HW – 4157, RV – 1416, RV – 6875, CC/128/IMT, 49 – 3938, 46 - 4180 போன்ற வாகனங்களுக்கு டயர்கள் கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வை.பீ.எம்.முஸம்மில் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக சகல கௌரவ உறுப்பினர்களும் தந்திருக்கின்றார்கள். இவ் வேலைகளை செய்து முடிப்பதற்கு கிட்டத்தட்ட 05 மில்லியன் தேவைப்படும். அதனால் இந்த மாதத்திற்குள் எஞ்சியிருக்கின்ற வேலைகளை செய்து தொடர்ந்து மற்றவைகளை ஜனவரி மாதம் செய்யலாம்.

**தீர்மானம் - 04/34/08**

பின்வரும் வேலைகளை எமது சபையின் மூலம் செயற்படுத்துவதற்கான பிரேரணை.

1. Construction of Culvert at Sennal Giramam (S Chanel)
2. Construction of Concrete Surface at Malkampitty 16th Road
3. Construction of Culvert at Puliyadi 2nd Cross Road
4. Construction of Culvert at MP Cross Road
5. Construction of Drainage at MPCS Lane, Sammanthurai - 02
6. Construction of Culvert at Meesadiyar Lane, Malayadikkiramam – 03
7. Construction of Drainage at Vaithiyar Road to Fowzi Mawatha,Malayadikkiramam – 04
8. Construction of Concrete Surface Road (Balance Work) at School Behind Road 3rd Cross, Malwatha
9. Construction of Concrete Surface at Shakthi Road Old Valathappiddy
10. Construction of Concrete Surface Road (Balance Work) at Konanayagar Road, Malwatha
11. Construction of Culvert at Mohideen Mawatha Cross Road
12. Construction of Culvert at Block J west – 02
13. Construction of Culvert at Veeramunai 05th Cross Kovil Road
14. Construction of Concrete Surface Road (Balance Work) at APC Road 02nd Cross Malwatha
15. Construction of Culvert at Am 14th Road (S-24 Chanel), Udanga – 02
16. Athankanni 1st Cross Road Block J West - 02

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இந்த அமர்வின் முக்கிய நோக்கம் இன்று இந்த ஊரில் இருக்கும் நிலவரத்தைப்பற்றி ஆராய்வதற்கு கௌரவ உறுப்பினர்கள் உங்களின் அனுபவங்களை வைத்து நாம் இந்த ஊரின் கொவிட் குழுவிற்கு எப்படியான வழிகாட்டலை கொடுக்கலாம். இன்று சம்மாந்துறையில் 06 பேர் நோய் தொற்றுக்குள்ளாகியவர்களாக இனங்காணப்பட்டு இருக்கின்றார்கள். அவர்களுடன் தொடர்புபட்ட 23 நபருக்கு PCR Test நடத்தப்பட்டு இருக்கின்றது. இன்னும் ஏறத்தாள 25 நபருக்கு PCR Test செய்ய ஏற்பாடுகள் செய்திருக்கின்றார்கள். இதில் முக்கியமாக 2 பிராந்தியங்கள் ஒன்று விளினியடியில் முன்னாள் உறுப்பினர் முஸ்தபா அவர்களின் குடும்பத்தோடு தொடர்புபட்டவர்கள். அவருக்கும் அவரின் மைத்துணருக்கும், மனைவிக்கும் Positive ஆக இனங்காணப்பட்டுள்ளது. அடுத்தது கல்லரிச்சல் - 01 பிரதேசம். இந்த சூழலில் இது சமூகத்தில் பரவலாக்கப்பட்டால் நமது நாளாந்த நடவடிக்கைகள் கட்டுப்படுத்த முடியாத ஒரு அம்சமாக மாறியுள்ளது. ஞாயிற்றுக் கிழமை வர்த்தக சங்கம் கூட்டம் நடாத்தப்பட்டது. MOH, DS, வர்த்தக பிரதிநிதிகள் அவர்களும் சில கருத்துகளை முன்வைத்தார்கள். வெளி வர்த்தகர்களை தடுப்பது, கூட்டம் கூட்டமாக செய்யும் வியாபாரங்களை தடை செய்து Mobile வியாபாரங்கள் செய்வதற்கு மீண்டும் நாம் அத் திட்டத்தை செய்ய வேண்டும் என்று,

என்னைப் பொருத்தமட்டில் வெளி வியாபாரிகள் வருவதை தடுப்பதில் 2 பக்கமும் பிரச்சினை இருக்கின்றது. எமது பகுதிக்குள் அதிகமாக வெளி வியாபாரம் செய்ய வருபவர்கள் மொன்றாகலை, வெள்ளவாய போன்ற கிராமத்தில் இருந்து வருபவர்கள் இருக்கின்றார்கள். அதே

நேரம் மீன் வியாபாரத்திற்கு சிலர் வருகின்றார்கள். தற்போது அவர்கள் வங்களாவடி, சிலஹிட சந்தி, கைகாட்டி பாலம், நெல்லுப்பிடிச் சந்தி போன்ற இடங்களில் பதியப்பட்டு Spray செய்யப்பட்டு, வெப்பநிலை பரிசோதித்து அனுப்பப்படுகின்றார்கள். ஆனால் சம்மாந்துறையில் அரிசை தவிர வேறு எதற்கும் தன்னிறைவு அல்ல. எல்லாம் வெளியில் இருந்து வர வேண்டும். அதை வேறு ஒரு முறையில் கொண்டுவர இயலாமல் போனால் இங்கு விலைவாசிகள் கூடும். அதையும் உள்வாங்கியதாக இதை எப்படி கட்டுப்படுத்துவது என்று உங்களின் அபிப்பிராயங்களை எடுத்து, இன்று மீண்டும் 11 மணிக்கு அக் கூட்டம் கூட இருப்பதால் இக் கூட்டத்தையும் சுருக்கமாக முடிக்க வேண்டி இருப்பதால் நிபந்தனை அடிப்படையில் கௌரவ உறுப்பினர்களை ஒருவர் ஒருவராக உங்களின் கருத்துகளை சுருக்கமாக வெளிப்படுத்துமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கொரோனா என்ற நோய் சம்மாந்துறையில் பரவி விட்டது. இதற்கு முதற் காரணம் துறைமுகத்தில் கடமையாற்றிய ஊழியர்கள். தெரிந்திருந்தும் அவர்கள் தனது ஊருக்கு சென்று தப்பி விடுவோம் என்ற எண்ணமோ தெரியாது வந்து விட்டார்கள். இது விளினியடி – 01 இல் இருந்த ஒருவரும் உடங்காப் பகுதியில் தங்கி வாழ்ந்ததால் உடங்கா பகுதியில் அவருடைய குடும்பத்திலும் 03 பேர், அதற்கு பக்கத்தில் ஒருவர் 05 பேருமாக உடங்காப் பகுதியில் சென்றிருக்கின்றார்கள். இவர்களை சந்திப்பதற்காக இவர்களது குடும்பங்களும் வந்திருக்கின்றார்கள். இவர்களின் குடும்பங்கள் சந்தித்த பின்னர் வேறு இடங்களிலும் வைத்திருக்கின்றார்கள். இவைகளை நாங்கள் தொலைபேசி மூலம் இவ்விடத்தில் சொந்தக்காரர்கள் இருக்கின்றார்கள் என்று அறிவித்தால் எங்களையும் தனிப்பட்ட முறையில் பாதிக்கக் கூடிய வகையில் உத்தியோகத்தர்கள் நடந்து கொள்வதால் எங்களால் அதை வெளிக்காட்ட முடியாமல் இருக்கின்றது.

கௌரவ தவிசாளர் அவர்களே, கொரோனா என்பதை தடுப்பது என்றால் நாம் உடனடியாக அந்த பிரதேசத்தை மட்டும் அப் பிரதேசத்தில் கடமையாற்றும் கிராம சேவகரின் அனுமதியையும் எடுத்து அப் பிரதேசத்தை Block பண்ணினால் நல்லது என நினைக்கின்றேன். அவர்களது குடும்பங்கள் வந்து அவர்களது வீட்டில் தரிசித்து இருந்தால் அவர்களையும் இனங்கண்டு தனிமைப்படுத்துவதனால் இதை தடை செய்ய முடியும். அடுத்ததாக தூர இடத்தில் இருந்து வருபவர்களைப் பற்றி அதிகமானோர் அதில் கரிசணை கொள்ளாமல் இருக்கின்றார்கள். அதிலும் நாம் எல்லோரும் விழிப்பாக இருக்க வேண்டும். எங்களுக்கு பக்கத்தில் இருந்தாலும் சொல்வதற்கு பயமாக இருக்கின்றது. நாங்கள் கௌரவ உறுப்பினர் என்று வெறும் பேச்சிற்குதான் இங்கு வந்து கொண்டிருக்கின்றோம் என்பதையும் இவ்விடத்தில் கூற விரும்புகின்றேன். ஏனென்றால் எங்களிடம் சொல்லியிருக்கலாமே என்றால் உங்களிடம் சொல்வதற்கு என்ன தேவை என்று இந்த சபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் கூறும் போது வெளியவர்கள் எங்களை எப்படி கணக்கிடுவார்கள். இது எனக்கு மட்டுமல்ல இந்த சபையில் இருக்கும் உறுப்பினர்கள் அனைவருக்கும் உரியது என்று சபை உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்களே, கொரோனா விடயத்தில் இன்றைக்கு ஜனாசாக்கள் எரிக்கப்பட்டிருக்கின்றது. ஜனாசாக்களை எரிப்பதனால் அந்த சூழல் மாசடைகின்றது. மரங்கள் பாழடைகின்றது, மரங்களை வெட்ட வேண்டி வரும் என்று தெரிந்திருந்தும் இதை புதைப்பதற்கு அனுமதி இல்லாமல் எத்தனையோ முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும், முஸ்லிம் தலைவர்கள் போராடியும் இலங்கையில் மட்டும் துரோகமாக ஏற்றுக் கொண்டு ஜனாசாவை எரிப்பது என்பது மிகவும் கவலைக்குரியது. ஜனாசா எரிக்கப்படுவது என்பதனால்தான் எங்களது மக்கள் இந்த நோயை மறைத்து வாழ்வதற்காகத்தான் கொழும்பில் இருந்தும் இங்கு வந்திருக்கின்றார்கள். இதுதான் என்னால் கூறமுடியும். ஏனென்றால் ஜனாசாவை எரித்து விடுவார்களோ நாம் நமது வீட்டில் சென்று தஞ்சம் அடையலாம் என்று அடைந்திருக்கின்றார்கள். இதனால் நாம் அவர்களை குற்றம் சொல்வதற்கும் இல்லை. இருந்தும் அவர்கள் தனியாக வாழ்ந்திருக்கலாம். எத்தனையோ பேரை அவர்கள் சந்தித்து இருக்கின்றார்கள். இதனால் யார் யாருக்கு கொரோனா இருக்கின்றது என்பதை கண்டுபிடிக்க முடியாது. எனவே கவசங்களை

மூக்கிற்கு கீழ், வாய்க்கு கீழ் தொங்கவிடாமல், ஒழுங்கான Sergical Mask அணிய வேண்டும் என்றும், எங்களது கைகளுக்கு Chemical தான் பாவிக்க வேண்டும் என்று இல்லை. தேசிக்காயையும், சுடுதண்ணியையும் கொண்டு எங்களது கைகளை சுத்தம் செய்து கொள்ளலாம். வெளியில் சென்றவுடன் உடைகளை வீட்டிற்குள் எடுத்துச் செல்லாமல் வெளியில் கழற்றி சலவை செய்துவிட்டு உள்நுழைவது நல்லது என்று நினைக்கின்றேன். குழந்தைகளை கண்ட கண்ட மாதிரி வாகனங்களில் கொண்டு செல்லாதீர்கள். வீட்டில் எந்தளவு நாங்கள் தாமதித்து இருக்க வேண்டுமோ அந்தளவுக்கு இருந்து கொள்ளுங்கள். சம்மாந்துறை என்பது பெரிய பிரதேசம் அதில் கொரோனா குடிகொண்டு விட்டால் சம்மாந்துறையே அழிந்து விடும் என்ற எண்ணம் தோன்றுகின்றது. ஆகவே நாங்களே எங்களை கட்டுப்படுத்த வேண்டும். நாங்கள் தெரிந்திருந்தும் மற்றவர்களுக்கு எதிராக வெளியில் நின்று கதைத்துக் கொண்டு இருந்தால் மற்றவர்கள் எப்படி உள்வாங்குவார்கள். எனவே இவ் விடயமாக அப் பிரதேசத்தை உடனடியாக ஒரு கட்டுக்கோப்புக்குள் கொண்டு வருவதில் கௌரவ தவிசாளர் அவர்கள் மும்முரமாக செயற்பட வேண்டும் என்றும் இந்த சபை ஊடாக கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது நாட்டில் இடம்பெற்று வருகின்ற கொவிட் 19 சம்மந்தமாக எங்களுடைய ஊரும் பாதிக்கப்பட்டு வருகின்ற நிலையில் நாம் இதைப் பற்றி பேசிக் கொண்டு வருகின்றோம். இதை Lock Down செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டாலும் மறைமுகமாக வேறு பிரதேசங்களுக்கு சென்று அவர்களுடைய பணிவிடைகளை பார்த்து வரக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றது. இதை தடுப்பதாக இருந்தால் யார் யார் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கின்றார்கள் என்ற விடயத்தை மக்கள் மயப்படுத்த வேண்டும். உதாரணமாக கல்லரிச்சல் - 01 இல் தனிமைப்படுத்தி இருக்கின்ற ஒரு மனிதர் பெரிய பள்ளிவாசல் பிரதேசத்திற்கு சென்றால் இவர் எந்த பிரதேசத்தில் இருந்து வருகின்றார் என்று தெரியாது. இவர் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கின்றாரா என்பதும் தெரியாது.

எனவே இதை எமது ஊர் மக்களுக்கு தெரியப்படுத்துவதன் மூலம் அவரவர் புகைப்படத்தோடு மக்கள்மயப்படுத்தினால் மாத்திரம் மற்றவர்களும் அச்சப்படுவார்கள். கொரோனா ஏற்பட்டால் நமது புகைப்படமும் வெளியாகிவிடும் என்ற அச்சத்தில் இருப்பார்கள். அதற்குரிய வாய்ப்பு இருக்கின்றதே தவிர வேறு எந்த தடையோ அல்லது எந்த ஒரு முடிவும் எடுக்க முடியாது. Curfew காலத்திலும் கூட எவ்வளவோ மக்கள் Motor Bike இல் அங்கும் இங்குமாக எவ்வளவோ பிரச்சினைகளை சந்தித்தோம். Lock Down செய்து கட்டுப்படுத்த முடியாது. அவர்களது பெயர், புகைப்படத்தோடு மக்கள் மயப்படுத்தினால் மாத்திரம் இதை கட்டுப்படுத்தலாம் என்பது எனது அபிப்பிராயம்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம்.முஸம்மில் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கொவிட் 19 சம்மந்தமாக பேசும் போது, தற்போது கொவிட் 19 இற்கு உட்பட்டவர்கள் ஊரில் இருப்பவர்களைப் பற்றி பேசுவது 50% என்றால் இனிமேல் வராமல் தடுப்பதற்காக என்ன ஏற்பாடுகள் அவர்கள் செய்ய முடியும் என்பதும் முக்கிய கவனம் ஆகும். நாம் அறிந்திருப்போம் கடந்த மாதங்களில் கொவிட் 19 இனால் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட போது இந்த ஊரில் இராணுவத்தினர் Motor Bike இனை பறிப்பதும், அவர்களுக்கு அடிப்பதும் போன்ற பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருந்தோம். ஆனால் Lock Down செய்யப்பட்டால் சம்மாந்துறை பிரதேசம் Lock Down செய்யப்பட்டுள்ளது என்று இலங்கை பூராகவும் அறிவிக்கப்படும். அதனை திறப்பது என்றால் எம்மால் செய்ய முடியாது. Lock Down செய்வதற்குரிய முயற்சியை நாம் செய்தாலும் அதனை மீண்டும் திறக்கும் போது எப்போது அந்த பிரதேசம் சீராகும் என்று தெரியாது.

நமது கிராமம் விவசாயத்துடன் தொடர்புபட்டது. விலங்கு வேளாண்மையுடன் சம்மந்தப்பட்டது. பண்ணை வளப்புடன் சம்மந்தப்பட்டவர்களும் இருக்கின்றார்கள். இந்த வேலைகளுக்கு உரிய நேரத்திற்கு செல்லாவிட்டால் அவர்களின் தொழில் முற்றாக பாதிக்கப்படும். Lock Down என்பது முக்கியமான விடயமாக இருந்தாலும் அதில் வரக்கூடிய அனுகூலங்கள், பிரதிகூலங்களை

சிந்தித்தே அதற்கு முடிவு எடுக்க வேண்டும். ஒரே பகுதியில் Lock Down செய்தால் அந்த மக்களின் வாழ்வாதாரங்கள் என்ன? அவர்களுக்கு உணவு எப்படி கொண்டு செல்வது? அவர்களுக்குரிய தேவைகளை எப்படி பூர்த்தி செய்ய முடியும் என்பதை முன்கூட்டி அதற்கான தெளிவான முடிவை கண்ட பின்னர் அம் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

அடுத்ததாக நாம் இதுவரையும் துறைமுகத்தில் இருப்பவர்களைப் பற்றி யோசிக்கின்றோம். மறைமுகமாக எத்தனையோ பேர் நமது ஊரில் இருந்து கொழும்பிற்கு சென்று வருகின்றார்கள் என்பது தெரியாது. கடந்த இரு தினங்களுக்கு முன்பும் பார்த்தேன். கொழும்பிற்கான பஸ் ஹிஜ்ரா சந்தியில் இருந்து எடுத்துச் செல்கின்றார்கள். இது அக்கரைப்பற்று பிரதேசத்தில் இருந்து வந்து நிந்தவூர் ஏனைய பிரதேச மக்களையும் ஏற்றிக் கொண்டுதான் சம்மாந்துறைக்கு ஏற்ற வருகின்றது. சம்மாந்துறையில் பஸ்ஸில் இருப்பவர்கள் இறங்கி தண்ணீர் போத்தலோ அல்லது ஏனைய தேவைகளையோ முடித்துக் கொண்டு பஸ்ஸில் ஏறி பிரயாணத்தை மேற்கொள்கின்றார்கள். நமது ஊரில் இருந்து யார் கொழும்பிற்கு சென்றார்கள், யார் கொழும்பில் இருந்து வந்தார்கள் என்ற தகவல் எவருக்கும் தெரியாது. வெளியூரில் இருந்து கொழும்பிற்கு எடுத்துச் செல்கின்ற பஸ் சம்மாந்துறையின் எல்லைப்புறமான நெல்லுப்பிடிச் சந்திற்கு மேற்பகுதியில் நின்றே உரியவர்களை வரவழைத்து சரியான முறையில் எழுதி யார் யார் கொழும்பிற்கு செல்கின்றார் என்பதை உறுதிப்படுத்தி அனுப்புவதால் அவர்கள் மீண்டும் ஊர் வரும் போது சுய தனிப்படுத்தலுக்கு உட்படுத்த முடியும் என்பது எனது கருத்து.

அத்துடன் கௌரவ உறுப்பினர் கூறியிருந்தார். காத்தான்குடி, ஓட்டமாவடி, ஏறாவூர் பகுதிகளில் தனியான சில இடங்கள் ஒதுக்கப்பட்டு தனிமைப்படுத்தல் முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் கொழும்பில் இருந்து வருபவர் அங்கு தங்கிய பின்னர்தான் வீட்டிற்கு செல்ல வேண்டும். இதை நாம் மேம்படுத்துவதால் நமது பகுதியில் கொழும்பில் இருந்து வருபவர்கள் வீட்டிற்கு வர வேண்டிய அவசியம் இல்லை. தனிமைப்படுத்தல் முகாம்களில் 14 நாட்கள் இருக்கும் போது அவர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டார் என்பதை எவரும் அறியக்கூடியதாக இருக்கும். அதனால் அவர்களின் சொந்தக்காரர்களோ அல்லது ஏனையோர்கள் வீட்டுக்கு சென்று சந்திக்கவோ தேவை ஏற்படாது. 14 நாட்கள் கழிந்த பின்னர் அவர்களது வீட்டுக்கு செல்வதால் கிட்டத்தட்ட 50 வீதமான பாதுகாப்பை எடுக்கலாம் என்பது எனது கருத்தாக இருக்கின்றது.

அத்துடன் சந்தையினை மூடி விட்டு வெளியில் சந்தையினை செய்ய விட்டிருக்கின்றோம். அதை விட கூடுதலானவர்கள் மீன் வாங்குகின்ற இடத்தையும், மரக்கறி வாங்குகின்ற இடத்தையும் நிற்கின்றார்கள். மீன் வியாபாரிகள் ஒரு இடத்தில் 02 பேருக்கு மேல் நிற்கக் கூடாது என்ற ஒரு முடிவை எடுத்து அதுவும் குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் வைக்க வேண்டும் என்று கூறி, இருக்கின்ற இடத்தில் இருந்து கைகாட்டி சந்தி வரைக்கும் 02 பேராக பிரித்து 100 மீற்றர் இற்கு அப்பால் 200 மீற்றருக்கு அப்பால் செல்வதால் நெருக்கமாக இருக்காது. வாகன Parking ஏற்படமாட்டாது. அவர்கள் செல்கின்ற வழியில் அதனை சீர் செய்து கொள்ளலாம் என்று கூறி விடை பெறுகின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இப் பிரச்சினையை கையாள்வதற்கு முதல் மக்களிடம் சென்று பார்த்திருந்தால் 05 பேர் இல்லை 50 பேர் வந்தாலும் மக்களின் நடைமுறையில் மாற்றம் குறைவாகத்தான் காணப்படுகின்றது. உலகத்திலே தீர்க்க முடியாத ஒரு நோய். அமெரிக்காவில் ஏற்பட்ட இழப்பு உலகத்திலேயே பாரிய இழப்பு. இந்தப் பிரச்சினையை மக்களிடம் மிகக் கூடுதலாக தெளிவுபடுத்த வேண்டும். இதற்காக அயராது உழைக்கின்றார்கள் எங்களது சுகாதார பரிசோதகர்கள். அதே போன்று வைத்தியசாலையில் இருக்கின்ற ஊழியர்கள் சகலரும் பொதுவாக கடமையின் நிமித்தம் எல்லோரும் ஒத்துழைப்பு சமமாக அவர்களது சேவைக்கும் மேலதிகமாக வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல இராணுவ உத்தியோகத்தர்கள் பரிசோதித்து அனுப்புகின்றார்கள் என்று நாம் சொல்கின்றோம். அதிகமானவர்கள் இராணுவத்தில் இருப்பவர்கள் பலியாகி இருக்கின்றார்கள். இந்த நோய் எப்படி எந்த விதத்தில் பரவுகின்றது என்று இன்னும் உண்மையாக சொல்ல இயலாத ஒரு நிலை. இந்த மேசையில் தொட்டால் ஒரு கிழமைக்கு அந்த

வைரஸ் சாகாமல் இருக்கும். நாங்கள் பேசுவதற்கு ஒரு இடைவெளி தூரம் வைக்கின்றோம். ஆனால் அவ் இடத்தை தொட்டால் அத் தொற்று ஏற்படுகின்றது. இந்த விடயத்தை உண்மையாக சம்மாந்துறையில் இருக்கின்ற அத்தனை குடிமகனுக்கும் நாம் முதலில் விளங்கப்படுத்த வேண்டும். எமது ஊர் ஏனைய முஸ்லிம் பிரதேசங்களை விட சனச் செறிவு குறைந்த ஊர். ஆனால் காலையில் பார்த்தோம் என்றால் எந்த ஊரிலும் செல்லாத அளவு சம்மாந்துறையில் 5000 இற்கு மேற்பட்டவர்கள் காலையிலேயே வேலைக்கு செல்கின்றார்கள். கல்வாடிக்கு செல்பவர்கள், வேளாண்மை வேலைக்கு செல்பவர்கள், மீன் பிடிக்க செல்பர்கள் என்று மிகவும் உழைப்பான ஒரு ஊராக இருக்கின்ற படியினால் நாங்கள் எந்தவொரு விடயத்தை எடுத்தாலும் நீங்கள் கூறியது போல் வேளாண்மையை தவிர வேறு எந்தவொரு வருமானமும் எங்களால் ஈட்ட முடியாது. ஒரு பழமொழி இருக்கின்றது கொட்டு நெல்லும் குறையக் கூடாது மக்கள் குண்டியும் வாழக் கூடாது என்பது போல் சென்ற முறையும் கொரோனா தாக்கத்தினால் அதி கூடிய உச்ச பயனை பெற்ற ஒரே ஒரு ஊர் சம்மாந்துறை.

எங்களால் சம்மாந்துறைக்கு ஒரு கெடுதல் வரவும் கூடாது. அதே போல் ஏனைய கௌரவ உறுப்பினர்கள் கூறிய அத்தனை விடயங்களையும் உள்வாங்கி பொதுமக்கள் அதாவது பக்கத்தில் இருக்கின்ற ஒவ்வொரு வீட்டுக்காரர்களும் வெளியில் இருந்து யார் வந்தாலும் உடனடியாக தகவல் கொடுக்கக் கூடிய தொடர்பை ஏற்படுத்த வேண்டும். உடனடியாக GS இற்கு அல்லது எமது பொதுவான ஒரு இலக்கத்தை கொடுத்து இந்த இலக்கத்திற்கு அறிவிக்க வேண்டும் என்று இலகுவாக தகவல் கொடுக்கக் கூடிய முறையை ஒவ்வொரு வட்டாரத்திலும் பொதுவாக பிரதிநிதிகள் ஊடாக செல்ல வேண்டும் என்றாலும் சொல்லலாம். கூடுதலாக அக்கறைப்பற்றில் 290 பேரில் Market உடன் தொடர்புடையவர்கள்தான் தொற்றுக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள். அதே போல் கொழும்பிற்கு செல்கின்ற பஸ்ஸினை தற்காலிகமாக தடை செய்தால் நல்லது என்று நினைக்கின்றேன். அவர்கள் இங்கு வர வேண்டிய அவசியம் இல்லை.

விஞ்ஞானத்தில் தலை சிறந்து முன்னேறிய நாடுகளே திணறிக் கொண்டிருக்கும் போது, எங்களை நாம் தான் பாதுகாப்பை தேடிக் கொள்ள வேண்டும் என்ற விடயத்தையும் பணம் செலவளிந்தாலும் பரவாயில்லை என்ன நடைமுறை என்பதை பிரதேச சபையால் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று அடையக்கூடியவாறு ஏற்பாடு செய்ய வேண்டும். சுகாதார பரிசோதகர்களுக்கும் நாமும் தேவையான நேரம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இவ்விடயத்தில் நாம் எல்லோரும் பொறுப்பு கூற வேண்டியவர்களாக இருக்கின்றோம். யாராவது கௌரவ உறுப்பினர் ஒருவரை நிராகரித்தால் அதை உண்மையாக நாங்கள் அத்தனை பேரும் ஒரு உறுப்பினருக்கு ஒரு அவமானம் ஏற்பட்டால் அது அவருக்குதான் என்று இல்லாமல், உடம்பில் ஒரு சின்ன விரலை இழந்தால் கூட வலி இல்லாமல் இருக்க இயலாது. அதே எண்ணத்துடன் எங்களுக்குள் இருக்கின்ற கருத்துகளை ஒவ்வொருவருக்கும் கருத்துச் சுதந்திரம் ஒவ்வொரு கருத்தில் இருக்கலாம். அதற்காக எந்த ஒரு உறுப்பினருக்கும் சுய கௌரவத்தை விட்டுக் கொடுப்பதற்கு இடம் அளிக்க முடியாது என்பதை மிகவும் தாழ்மையாக கௌரவ தவிசாளர் அவர்களிடம் கேட்டு எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மக்கள் முகக்கவசத்தை அவர்களுக்காக அணியவில்லை. அரசாங்கம் எங்களை கண்டால் தண்டம் அறவீடு செய்வார்கள் என்ற ஒரு நிலமைக்காகத்தான் அந்த கவசத்தை அணிந்து வெளியேறுகின்றார்கள். ஏனென்றால் பொது இடங்களில் குழந்தைகளை கவசம் இன்றியும் தாய்மார்கள் கவசத்தை அணிந்து பொது இடத்திற்கு செல்கின்றார்கள். உதாரணமாக வங்கியை எடுத்துக் கொண்டால் அங்கு சிறு பிள்ளைகளை எடுத்துக் கொண்டு செல்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு கவசம் பிள்ளைகளுக்கு கவசம் இல்லை. அவர்களுக்கு இந்த நோயின் பாரதூரம் தெரியாததனால்தான் கவசம் இல்லாமல் கொண்டு செல்கின்றார்கள். பொது இடங்களில் சிறுவர்களை அனுமதிப்பதை முற்றாக தடுக்க வேண்டும். எனவே இதற்கு சபை ஊடாக தீர்மானம் எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இத்தனை காலமும் சம்மாந்துறை மண்ணில் கொரோனா தொற்றாளர்கள் எவரும் இல்லை என்ற மிகப் பெரிய சந்தோசத்தில் இருந்து கொண்டிருந்த வேளையில் துரதிஸ்டவசமாக இலங்கை துறைமுக அதிகார சபையில் பணிபுரிந்த ஒருவரினால் அவர் எமது ஊரைச் சேர்ந்தவர். யாரும் எதையும் வேண்டும் என்றே செய்வதில்லை. அவருக்கு கூட பரிசோதனை செய்துவிட்டுதான் ஊருக்கு அனுப்பி இருக்கின்றார்கள். வந்த பின்னர்தான் இந்த நோய்க்குள்ளாக்கப்பட்டார் என்ற சம்பவம் தெரியப்பட்டது. இருந்தாலும் அவரோடு வந்த ஏனைய ஊழியர்கள் 14 நாட்கள் தனிமைப்படுத்தலில் இருந்து கொண்டிருக்கின்றார்கள். இவர் இவரின் சொந்த தேவைகளுக்காக வெளியாகியதன் காரணமாக அவரின் ஊடாக இன்னும் சிலருக்கு தொற்று ஏற்படுவதற்கான காரணம் ஏற்பட்டுள்ளது. எனவே உண்மையாக என்னைப் பொருத்தவரையில் சம்மாந்துறை மக்கள் இந்த நோயினுடைய பார தூரம் என்ன? இதன் தாக்கம் என்ன? என்பதை இன்னும் அறியவில்லை. இதை அறிந்தவர்களாக இருந்திருந்தால் இன்று கூட நாம் 20 பேர் இந்த கூட்டத்தை நடத்துவதற்கு யோசித்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் தற்போது எமது 04 பிரதான வீதிகளுக்கும் சென்றால் திருமண வீடுகள் விளையாட்டு மைதானங்களை விட மோசமாக இருக்கின்றது. இதுதான் இந்த ஊரின் நிலை. தன்னை தான் திருத்திக் கொள்ளாத வரைக்கும் யாரும் இன்னொருவரை திருத்த முடியாது. ஆகவே தன்னை நோயிலிருந்து தான்தான் பாதுகாக்க வேண்டும்.

அடுத்ததாக கொழும்பிற்கு அல்லது வெளியூருக்கு பஸ்ஸில் மாத்திரம் பிரயாணம் செய்பவர்கள் இல்லை. தனியார் வாகனங்கள் வைத்திருப்பவர்கள் அந்த வாகனத்திலே செல்கின்றார்கள். இன்று கொழும்பிற்கு கூடுதலான இளைஞர்கள் தங்களின் தேவைகளை மோட்டார் சைக்கிளிலே சென்று வருகின்ற விதம் மிகவும் கூடுதலாக இருக்கின்றது. ஆகவே என்னைப் பொருத்தவரைக்கும் வெளியூரில் இருந்து வருபவர்கள் தனிமைப்படுத்துவதற்கு இந்த சபை ஊடாக ஒரு முடிவை எடுத்து இவர்களை தனிமைப்படுத்த வேண்டியது இந்த நோயை கட்டுப்படுத்துவதற்கு ஒரு 50% காரணம். எவ்வாறாயினும் எமது ஊருக்குள் இருக்கின்ற இடத்தை அல்லது எமது சபையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற இடத்தையாவது தெரிவு செய்து இவர்களுக்கு தனிமைப்படுத்தலை ஏற்படுத்த வேண்டும்.

ஒருவருடைய வாழ்வாதாரத்திற்காக நாங்கள் பல பேரை பலி கொடுக்க முடியாது. எல்லோரும் ஏறத்தாள 70 வீதமான மக்கள் அன்றாடம் தொழில் செய்து அவர்களுடைய வாழ்வாதாரத்தை தேடிக் கொள்கின்ற மக்கள்தான் சம்மாந்துறை மக்கள். இருந்தாலும் இவ்வாறான அனர்த்த சூழ்நிலை வரும் போது நாங்கள் ஓரளவேனும் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும். அதற்காக முதலில் இந்த நோய் தொற்று ஏற்பட்டிருக்கின்ற கிராம சேவகர் பிரிவுகளில் நாங்கள் முதற்கட்டமாக அதை ஒரு கட்டுக்கோப்பிற்குள் கொண்டுவர வேண்டுமாக இருந்தால் அப் பிரதேசத்தை Lock Down செய்தே ஆக வேண்டும்.

தற்போது நாம் எல்லோரும் அறிந்த விடயம் அம்பாரை மாவட்டத்தைப் பொருத்தவரையில் அக்கரைப்பற்று பிரதேசத்திலே மிகக் கூடுதலான கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு இருக்கின்றார்கள். இந்த நோயினுடைய பரவலாக்கமும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. அப் பிரதேசத்தில் இருந்து எங்களது ஊருக்கு வியாபாரத்திற்காகவோ அல்லது வேறு தேவைகளுக்காகவோ வருபவர்களையும், எங்களுடைய ஊரில் இருந்து அப் பிரதேசத்திற்கு செல்பவர்களையும் நாங்கள் தடை செய்ய வேண்டும். உதாரணமாக நான் கடமையாற்றுகின்ற நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை காரியாலயத்திலும் 03 அக்கரைப்பற்று ஊழியர்கள் கடமையாற்றினார்கள். முதல் நாளே அவர்களை நாங்கள் காரியாலயத்திற்கு வர வேண்டாம் என்று அனுமதி எடுத்து அவர்களை அங்கு இருக்கின்ற காரியாலயத்தில் பணி புரிவதற்கு அல்லது வீட்டில் இருந்து வேலை செய்கின்றவாறு செய்திருக்கின்றோம்.

கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறியது போல் அக்கரைப்பற்றிலே இருந்து பிரதான வீதி ஊடாக எமது ஊருக்கு வர வேண்டிய தேவை இல்லை. மோட்டார் சைக்கிளில் வருபவர்களுக்கு நிறைய வயல் வெளிகளால் வரக்கூடிய சந்தர்ப்பம் இருக்கின்றது. ஆனால் எமது ஊருக்குள்

வராமல் தடுப்பதற்கு எங்களுக்கு இலகுவான இடம் இருக்கின்றது. நாங்கள் பள்ளாத்தடியில் இருக்கின்ற இடத்தில் எங்களுடைய சபை ஊழியர்களையோ அல்லது அந்த இடத்தில் ஏதோ ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நிறுத்தி இந்த தொற்றுக்கு கூடுதலாக தற்போது அக்கரைப்பற்று பிரதேசத்தில் பரவி இருக்கின்றது. அங்கு இருந்து வருபவர்களை தடுப்பது எமது ஊருக்குள் இந்த ஊர் பரவுவதை தடுப்பதற்கு இன்னுமொரு சந்தர்ப்பமாக இருக்கும்.

அதே போன்று எங்களுடைய வியாபாரஸ்தலங்களில் ஆகக் கூடுதலாக மீன்வியாபாரம் வெளியில் இருக்கின்றது. எந்தவிதமான கவனமும் இல்லாமல், முகக்கவசம் இல்லை, இடைவெளி இல்லை. ஒரு இடத்தில் 50, 100 பேர் நிற்கின்றார்கள். அதே போன்று வியாபாரம் செய்பவர்களிடமும் எந்தவிதமான சுகாதார நடவடிக்கைகளும் இல்லை. இவ்வாறு இருப்பதால் இந்த நோய்த்தொற்று மிகவும் கூடுதலாக இந்த ஊருக்குள் பரவக்கூடிய சந்தர்ப்பங்களே இருக்கின்றது. ஆகவே நாம் நோயை தடுப்பதற்காக இப்போது அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று பிரதேசங்களிலே தனிமைப்படுத்தலில் இருந்த குடும்பங்களுக்கு அரசினால் அவர்களுடைய வாழ்வாதாரத்திற்காக வாழ்வாதார பொருட்கள், உணவுகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. நாடு பூராகவும் இது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆகவே இதில் நாங்கள் சம்மாந்துறையில் நோயாளர்கள் உள்ளார் என்பதில் வெட்டிக் குணிவதற்கு எதுவுமே இல்லை. உலகளாவிய ரீதியிலே இந்த நோயின் தாக்கம் பாதிப்படைந்து கொண்டே இருக்கின்றது.

ஆகவே நாங்கள் அவ்வாறு தனிமைப்படுத்தப்படுகின்ற குடும்பங்களுக்கு இந்த சபையினால் என்ன செய்ய முடியுமோ அவற்றையும் செய்ய வேண்டும். அதே போன்று இவ் ஊரிலே 02 அபிவிருத்தி மையங்கள் இருக்கின்றது. ஒன்று பிரதேச சபை, இன்னுமொன்று பிரதேச செயலகம். அதனூடாகவும் மக்களுக்கு தேவையான வாழ்வாதாரத்தை நாங்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய முயற்சிகளை எடுப்போம். இதற்கு அப்பால் எங்களால் முடியுமானவரை எங்களுடைய பிரதேசத்திலே தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு நாங்களும் அந்த உதவியை செய்யலாம். ஆகவே இந்த நோயை தடுப்பதற்காக இந்த சபையால் என்ன முடிவுகள் எடுக்க முடியுமோ அல்லது சில வேளை செலவுகள் செய்ய வேண்டி வந்தாலும் நாங்கள் தற்போது செய்து கொண்டுதான் இருக்கின்றோம். தனிமைப்படுத்தலுக்காக எவ்வளவு பணம் தேவைப்படுகின்றதோ இந்த ஊரின் நலன் கருதி நாங்கள் சபையின் ஊடாக மேற்கொள்ள வேண்டும் என்பதை வினயமாக கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று நாட்டில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியில் பரவி வருகின்ற கொவிட் 19 பரவல் தொடர்பாக நாங்கள் இந்த ஊரில் முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். ஏதோ தற்போது எங்களிடமும் வந்துவிட்டது. இதை மேலும் பரவாமல் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை இந்த பிரதேச சபை ஊடாக கௌரவ தவிசாளர் அவர்கள் முன்னெடுக்க வேண்டும் என்பது உறுதியான கருத்தாக இருந்து கொண்டிருக்கின்றது. அந்த அடிப்படையில் விளினியடி பிரிவில் ஏற்பட்ட துறைமுக அதிகார சபையின் ஊழியரின் தொற்று காரணமாக அவரது பக்கத்து வீட்டு பெண் ஒருவர் இது சம்மந்தமாக முறையிடுவதற்காக அப் பிரதேச கிராம சேவகரிற்கு அழைப்பு ஏற்படுத்தி இருக்கின்றார் ஆனால் முடியாமல் போய்விட்டது. அதன் பின்னர் சுகாதார பிரிவை சார்ந்தவர்களுக்கு வெளிப்படுத்தி இருக்கின்றார். எனவே உத்தியோகத்தர்களும் இவ் விடயத்தில் மிகவும் கருசணையாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை அப் பகுதிக்கான அரச தலைமைத்துவங்களுக்கு எத்தி வைக்க வேண்டும். அவர்கள் மேற்கொள்கின்றார்கள்தான் இருந்தாலும் மீண்டும் ஞாபகம் ஊட்ட வேண்டும் என்பது எனது கருத்து.

அடுத்ததாக நாங்கள் இப் பிரதேசத்தில் இருக்கின்ற கல்லரிச்சல், விளினியடி பிரதேசங்களில் ஏற்பட்டிருக்கின்ற அந்த நிலை மேலும் தொடராமல் இருக்க இங்கு இருக்கின்ற அனைத்து கௌரவ உறுப்பினர்களும் தவிசாளர் உட்பட மேலும் பரவாமல் இருப்பதற்கான பிரச்சாரங்களை முன்னெடுக்க வேண்டிய கடைப்பாடு எங்களுக்கு இருந்து கொண்டிருக்கின்றது. அந்த அடிப்படையில் எனது கருத்தாக நான் முன்வைப்பது அந்தந்த வட்டாரத்தில் இருக்கின்ற பிரதிநிதிகள், அந்தந்த வட்டாரத்தில் இருக்கின்ற பாடசாலைகள், அரச நிறுவனங்கள், மேலும் இருக்கின்ற தொழில் நிறுவனங்கள் பொதுமக்களுக்கு ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்தால்

இப் பிரதேசம் எல்லாம் ஒரு கால எல்லைக்குள் நடப்பது மக்கள் மத்தியில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தும். மக்கள் விளங்கிக் கொள்வதற்கு ஒரு வசதியாக இருக்கும் என்பது எனது கருத்து. அந்த அடிப்படையில் காரைதீவு பிரதேச சபையின் கௌரவ தவிசாளர் அவர்கள் அங்கு நிகழ்ச்சிகளை முன்னெடுத்து வருகின்றார். நான் காரைதீவு பொறுப்பு அஞ்சல் அதிபராக இருக்கின்றேன். எங்களது அலுவலகத்திற்கும் வந்து அந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். அதன் பின்னர்தான் நானும் சம்மாந்துறை பிரதேச சபையில் ஒரு உறுப்பினர் என்று கூறினேன். அவர் என்னிடம் பேசிவிட்டு சென்றுவிட்டார்.

எனவே நாங்கள் இந்த நிலையை தொடரவிடாது என்ன என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த சபை கௌரவ உறுப்பினர்கள் எல்லோரும் திட்டமிட்டு அதன் அடிப்படையில் நாங்கள் முன்னெடுக்க வேண்டும். குறிப்பாக இங்கு கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் அவர்களது பேச்சுக்களில் ஒன்றை மட்டும் கூறினார்கள் மீன் வியாபாரிகளைப்பற்றி, மீன் வியாபாரத்திற்கு பிரதேச சபையினால் ஒழுங்கு செய்திருக்கின்றோம். ஆனால் தெருத் தெருவாக பெட்டி வியாபாரிகள் செல்வதுதான் எல்லாவற்றையும் விட ஆபத்தாக இருக்கின்றது. பெட்டி வியாபாரிகள் என்ன நிலையில் இவ் ஊருக்குள் வருகின்றார், கொரோனா தொற்று இருக்கின்றதா? இல்லையா? என்று தெரியாத நிலையில் பெட்டி வியாபாரிகள் ஊரில் மிகவும் கூடுதலாக செல்கின்றார்கள். எனவே அந்த பெட்டி வியாபாரிகளை தற்காலிகமாக தடுப்பது இன்றய காலகட்டத்திற்கு சிறப்பாக இருக்கும் என கருதுகின்றேன். மேலும் கடந்த முதலாவது கொவிட் 19 இந்த நாட்டில் உருவாகும் போது அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் முற்போக்கான நடவடிக்கையின் மூலம் சிறப்பாக கொவிட் 19 கட்டுப்பாட்டுக்குள் இலங்கை வந்தது என்பதில் நாம் எல்லோரும் மகிழ்ச்சியடைந்தோம்.

இருந்த போதிலும் பின்னர் ஏற்படுகின்ற நிலைகளில் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தாது இருந்ததை ஊடக ரீதியிலும் பல்வேறான நிலைகளில் நாம் அறிந்திருக்கின்றோம். ஆகவே அரசாங்கமும் இதில் கூடிய கவனம் செலுத்தி இதை தடுப்பதற்கான சகல நிகழ்வுகளையும் மேலும் முன்னெடுக்க வேண்டும் என நான் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். இந்த நோய் பரவப்பட்டிருக்கின்ற பிரதேசங்களை உண்மையாக மேலும் பரவக்கூடிய சூழ்நிலையாக இருந்தால் அதை Lock Down செய்வதில் எந்தவிதமான தப்பும் இல்லை. ஏனென்றால் நாங்கள் அந்த நோயை மேலும் பரவ விடாமல் தடுப்பதற்காகத்தான் மேற்கொள்கின்றோம். ஆகவே இப்படியான விடயங்களை நாம் எல்லோரும் கருத்திற் கொண்டு சிறப்பான ஒரு முடிவை இந்த சபையில் எடுக்க வேண்டும் என நான் எல்லோரிடமும் பணிவாக கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

உங்களது கருத்துகளை உள்வாங்கும் போது நிச்சயமாக நீங்கள் எல்லோரும் இதில் மிகவும் ஆர்வமாகவும், அக்கரையுடனும் இருப்பதாக விளங்குகின்றது. பலரின் கருத்து அப் பகுதிகள் Lock Down செய்யப்பட வேண்டும் என்று, அதில் இருக்கும் நிர்வாகப் பிரச்சினைகளைப் பற்றி ஆராய வேண்டும். அடுத்ததாக கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறியவாறு மக்களுக்கு அறிவூட்டல். இது நமது மக்களுக்கு எவ்வளவோ தொலைக்காட்சியிலும், Whatsapp இலும், FaceBook இலும் எல்லா வகையிலும் அறிவூட்டப்பட்டும் இன்னும் அதை உள்வாங்காமல் நடப்பது உண்மையாக மனவருத்தத்திற்குரிய விடயம். நமக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த சமூகத்திற்கும் ஆகும். நாட்டில் நாம் சட்டத்தை மதிக்காதவர்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றோம். இதை மக்கள் இன்னும் உணரவில்லை. கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் கூறியது போல் குழந்தைகளையும் கூட எல்லா நடவடிக்கைகளிலும் எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் எடுத்துச் செல்கின்றார்கள். அவர்களிடம் கேட்டால் நான் வங்கிக்கு வர வேண்டும் வீட்டில் குழந்தையை பார்க்க ஒருவரும் இல்லை என்று சொல்வார்கள்.

கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் வாழ்வாதாரத்தைப் பற்றி பேசினார். உங்களுக்கு தெரியும் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் போது அக் குடும்பத்திற்கு ஏறத்தாள ரூபா 10000.00 பெறுமதியான உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றது. இதில் உண்மையாக நான் கொவிட் கூட்டத்தில் கூறிய கருத்து என்னவென்றால் வெளியிடத்தில் இருந்து வந்து தனிமைப்படுத்தப்படுவர்களுக்கு நாம் இந்த

உதவியை செய்கின்றோம். ஆனால் இந்த நோய் பரவக்கூடாது என்று வீட்டில் இருக்கும் ஏழைகளுக்கு எந்த உதவியும் சென்றடைவதில்லை. இதுதான் இன்றைய பரிதாபமான நிலை. உத்தியோகபூர்வமாக தனிமைப்படுத்தப்பட்டால் அவர்களுக்கு அரசாங்க உதவி கிடைக்கின்றது. ஆனால் அவர்கள் தனிமைப்படுத்தலை மீறி உலாவுகின்றார்கள். அதே நேரம் இந்த நோய் பரவக்கூடாது என்று வீட்டில் இருப்பவர்களுக்கு எந்த ஒரு உதவியும் இல்லாத பரிதாபமான நிலை. அதை என்ன செய்யலாம் என்பது ஒரு பெரிய சவால்.

மீன் வியாபாரிகள் தொடர்பாக, எல்லா வியாபாரங்களையும் Mobile Service மூலம் செல்வதற்கு நாம் அனுமதித்ததற்கு காரணம் இல்லாவிட்டால் ஒவ்வொரு பாதையிலும் மீன் விற்கும் இடத்தில் 20, 25 பேர் நிற்கின்றார்கள். கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறியது போல் மக்கள் விளங்க வேண்டும். ஞாயிற்றுக் கிழமை நடந்த வர்த்தக சங்கத்தில் ஒரு இளைஞர் அரசாங்கம் சதி செய்கின்றது என்று பேசினார். நான் சொன்னேன் அரசாங்கம் சதி செய்கின்றது என்றால் அதற்கு நாம் என்ன செய்கின்றோம். நாம் அதற்கு உடந்தையாக இருக்கக் கூடாது. நாம் இன்னும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். அப் பாதுகாப்பை இன்று கிராம மட்டத்தில் ஒவ்வொரு மஹல்லா ரீதியாகவும் அந்த கிராம உத்தியோகத்தர், EDO, சமுர்த்தி உத்தியோகத்தர், அப் பகுதியில் இருக்கும் கௌரவ உறுப்பினர்கள் எல்லோரும் மஹல்லா நிர்வாகத்தோடு சேர்ந்து ஒவ்வொரு பகுதியாக கட்டுப்படுத்தாவிட்டால் இப் பிரச்சினை தீராது. கௌரவ உறுப்பினர் சரிபா அவர்கள் கூறியவாறு நாம் சொல்லப்போனால் காட்டிக் கொடுக்கின்றார்கள் என்று வருகின்றது. எமது ஊரில் இது ஒரு நோய். எல்லோருக்கும் அந்த பொறுப்பு இருக்கின்றது.

மஹ்ரிப் இற்கு பின்னர் WP Number, CP Number, NCP Number உடைய வாகனங்கள் ஊருக்குள் செல்கின்றது என்று அந்தக் கூட்டத்தில் கூறப்பட்டது. உடனே அந்த தகவல் கொடுக்கப்பட வேண்டும். CP Number கார் இவ்விடத்தில் நிற்கின்றது அதனை ஆராய வேண்டும் என்று, சில நேரம் இந்த ஊரில் வசிப்பவராகவும் இருக்கலாம். ஆனால் வெளியில் இருந்து வந்தவராகவும் இருக்கலாம். அந்த விதத்தில் அவதானிப்பை எடுத்துச் சென்றால்தான் இதை முடிக்கலாம். நிச்சயமாக தனிமைப்படுத்தும் ஒரு நிலையம் உருவாகுவது மிகவும் திறமானது. ஆனால் அதை பராமரிப்பது எந்தளவு சாத்தியம். ஏனென்றால் நாம் தனியே நடாத்த முடியாது. பொலீஸ் அல்லது இராணுவம், MOH, DS எல்லோரும் சேர்ந்து செய்ய வேண்டும்.

உங்கள் கருத்துகள் எல்லாவற்றையும் நான் நிச்சயமாக இன்றைய கூட்டத்தில் முன்வைத்து எடுக்கும் முடிவை உங்கள் எல்லோருக்கும் எமது Group இன் மூலம் அறிவிப்பேன். ஆனால் கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் கூறியது ஆக்கபூர்வமான கருத்து. கொவிட் 19 இனால் பீடிக்கப்பட்டவர்கள், தனிமைப்படுத்தப்பட்டவர்களின் படங்களையும், விபரங்களையும் பரவலாக்குவதனால் ஏனையவர்கள் பயப்படுவது மட்டுமல்ல அவர்களுக்கு விளங்கும். எமது முன்னாள் உறுப்பினர் முஸ்தபா அவர்களின் மனைவி இருக்கின்ற இடத்தில் ஒரு சில்லறைக் கடை இருக்கின்றது. அந்த சில்லறைக் கடைக்கு இவர்கள் அடிக்கடி சென்று வந்தார்களாம். அந்த சில்லறைக் கடைக்கு எத்தனையோ பேர் வந்திருப்பார்கள். எனவே இந்த ஆபத்தை தடுப்பதற்கு நாம் எல்லோரும் விழிப்பாக இருந்து நமது பங்கை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இராணுவத்தினால் எமக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. சிறைச்சாலைகளில் இருந்து தனிமைப்படுத்தலுக்காக அனுப்பப்படும் கைதிகள் இராணுவ முகாம்களுக்கு வருவதனால் இராணுவ உத்தியோகத்தர்கள் அவர்களின் இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டு அவர்களுக்கு தற்காலிக தரிப்பிடங்கள் உருவாக்க ஒரு தேவை இருக்கின்றது. சம்மாந்துறை பிரதேச சபையில் இருந்து 12 அடி Tin Sheet 60 அன்பளிக்குமாறு கேட்டிருக்கின்றார்கள்.

### தீர்மானம் - 04/34/09

இராணுவ உத்தியோகத்தர்களுக்கு கொவிட் 19 இற்காக தற்காலிக தனிமைப்படுத்தல் இருப்பிடம் அமைப்பதற்காக 12 அடி Galvanised Roofing Sheets 60 இனை கொள்வனவு செய்து வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எம்.முஸ்தபா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/34/10

1987 ஆம் ஆண்டில் 15ம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 146 ஆவது பிரிவின் (I) ஆவது உப பிரிவினால் சம்மாந்துறை பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் சம்மாந்துறை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் முன்னேற்றப்பட்ட பகுதிகளாக பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளுக்குள் அமைந்திருக்கும் சகல வீடுகளின், கட்டடங்களின், காணிகளின் வருடாந்த பெறுமதிக்காக 2020 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை 2021 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடாகவும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனவும், அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின் 134 (1) மற்றும் (2) ஆம் உப பிரிவின் மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அந்தச் சொத்துக்களுக்கான மேற்குறித்த வரி மதிப்பீட்டிற்கு வருடாந்த பெறுமதியில் இருந்து (7%) ஏழு வீதம் அறவிடப்பட வேண்டும் என பிரேரிக்கின்றேன்.

மேலும் 2021 ஆம் ஆண்டின் கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் ஒவ்வொரு காலாண்டிற்காக அதற்கு முன்னால் காட்டப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் விதிக்கப்பட்ட வருடாந்த வரிப்பணத்தை பிரதேச சபை நிதியத்திற்கு செலுத்த வேண்டும் எனவும் அவ்வாறு வருடாந்த வரிப்பணத்தை 2021 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தினால் வருடாந்த வரியிலிருந்து நூற்றுக்கு பத்து (10%) வீத வரி தள்ளுபடியும், அந்த உப ஆவணத்தில் ஒவ்வொரு காலாண்டிற்கு முன்னால் மூன்றாவது வரிசையில் காட்டப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் குறித்த வரிப்பணம் பிரதேச சபை நிதியத்திற்கு செலுத்தப்படுமானால் அந்த காலாண்டிற்குரிய வரிப்பணத்திலிருந்து நூற்றுக்கு (5%) வீத வரி தள்ளுபடியும், பிரதேச சபையினால் வழங்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கின்றேன்.

வரிப்பணத்தை ஒவ்வொரு காலாண்டுக்குள் செலுத்தத் தவறும் பட்சத்தில் அந்தப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்காக வெளிப்படுகின்ற உத்தரவுப்பத்திரத்தின் பிரகாரம் ஆதனவரி அறவீடுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியுள்ள வரியில் இருந்து நூற்றுக்கு பன்னிரண்டு (12%) வீதம் மிகைக்கட்டணம் அறவிடுவதற்கான பிரேரணை.

**அட்டவணை**

| **காலாண்டு** | **செலுத்த வேண்டிய திகதி** | **5% கழிவு பெற செலுத்த வேண்டிய இறுதித் திகதி** |
|---|---|---|
| **நிரல் I** | **நிரல் II** | **நிரல் III** |
| 1 ஆம் காலாண்டு | மார்ச் 31 இற்று முன்னர் | ஜனவரி 31 |
| 2 ஆம் காலாண்டு | யூன் 30 இற்கு முன்னர் | ஏப்ரல் 30 |
| 3 ஆம் காலாண்டு | செப்டம்பர் 30 இற்கு முன்னர் | யூலை 31 |
| 4 ஆம் காலாண்டு | டிசம்பர் 31 இற்கு முன்னர் | ஒக்டோபர் 31 |

முன்னேற்றப்பட்ட பகுதிகளாக பிரகடணப்படுத்தப்பட்ட கீழ்வரும் வட்டாரங்களிலுள்ள புதிதாக மதிப்பீடு செய்யப்பட்ட பிரிவுகளிலிருந்து மேற்படி வரி அறவீடு செய்யப்பட வேண்டும் என பிரேரிக்கின்றேன்.

| வட்டாரம் | கிராம அலுவலர் பிரிவு |
|---|---|
| 1. 3 ஆம் வட்டாரம் | கருவாட்டுக்கல் - 01 |
| 2. 6 ஆம் வட்டாரம் | கருவாட்டுக்கல் - 02 |
| | கருவாட்டுக்கல் - 03 |

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.நஜீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சிறிய தகவல் ஒன்று வைத்திய அறிக்கை இன்று அம்பாறை வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு கொரோனா என்பதால் அம்பாறை வைத்தியசாலை மூடப்பட்டுள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஒவ்வொரு கௌரவ உறுப்பினரும் உங்களது பகுதியில் இருக்கின்ற கோயில் நிர்வாகம், பள்ளிவாசல் நிர்வாகத்தோடு சேர்ந்து அப் பொறுப்பை எடுக்க வேண்டும். எல்லாவற்றையும் சபையும், DS உம் செய்ய இயலாது. இந்த சபையின் ஊழியர்கள் ஒரு தியாக உணர்வோடு 03ம் மாதத்தில் இருந்து இன்றுவரை இந்த ஊரில் இன்னும் குப்பை குறையவில்லை. இவ்வளவு ஆபத்தோடு வேலை செய்கின்றார்கள் என்று குப்பையை குறைப்போம் என்று இல்லை. வீட்டில் இருக்கின்ற மரங்கள் எல்லாவற்றையும் வெட்டி போடுகின்றார்கள். செயலாளரிடம் கூறினேன் ஒரு அறிக்கையை செய்து அறிவிக்க வேண்டும் என்று, அவர்களும் மனிதர்கள் அவர்களையும் பாதுகாக்க வேண்டும். அதனால் குப்பைகள் எடுப்பதை கட்டுப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் எடுக்கின்ற கட்டனத்தை கூட்ட வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது ஊழியர்களுக்கு மழை காலம் என்பதால் மழை காப்பு அங்கியினை உடனடியாக வழங்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உண்மையாக எமது ஊழியர்கள் தியாக உணர்வோடு செய்கின்றார்கள். கௌரவ உறுப்பினர்கள் சார்பில் நன்றி கூற வேண்டும். அது மட்டுமல்லாமல் அவர்களுக்கு என்ன செய்ய வேண்டுமோ அவ் வேலைகளை துரிதப்படுத்த வேண்டும். தற்போது Tractor கள் அனுப்புவதை குறைத்திருக்கின்றோம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த ஊழியர்களுக்கான கொரோனா பாதுகாப்பு உடையினை சுகாதார வைத்திய அதிகாரி ஊடாக பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் கூறிக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்கள் கருத்தை உள்வாங்கியவனாக, சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

A.M.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை